முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1343

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.06.2023**, சனிக்கிழமை

1. ஞானவேலிகொண்ட தேசிகனே
ஞானிகளை படைக்க வந்த ஆறுமுக அரங்கனே
ஞானபண்டிதன் யானும் உந்தனுக்கு
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சோபகிருது விடை திங்கள் உரைப்பேன்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 20 ம் நாள், 03.06.2023, சனிக்கிழமை)
அரங்கனே கலியின் சிறந்த ஞானி
வாசி வென்ற தலைவர்கள் துணைவர
வள்ளலாக வாழுகின்ற ஞானி அரங்கனே
3. அரங்கனை குருவாக ஏற்ற மக்கள்
அறம் வழி என்றும் மீறா செயல்பாடாகி
வரங்கள் இன்னும் பல கூடிகூடி
வையகத்தில் வாழும் காலமே ஞானியாகும்
4. ஆகின்ற வாய்ப்பு நிலைகள் பெற்று
அரங்கன் வழி அழியாமை அனைவரும் அடைவர்
வரமாக அரங்கன் வழி தீட்சையை
வாரி வழங்குகின்றேன் வடிவேலன் யான்
5. யானுரைக்க அரங்கனைத் தொடர்ந்து
ஞானம் பயின்று அன்னதான சேவை
பாரெங்கும் செய்கின்ற மக்களெல்லாம்
பாடிடுவேன் ஞானிகளாக ஆற்றல்பெருகி
6. பெருகியே கலியுக மாற்றத்தில்
பெரும்பங்கு அவரவரும் கண்டு இனிதே
வரும் உலகை ஞானவான்கள் ஆளுகின்ற
வல்லமைகொண்ட ஞான ஆட்சிக்காலமாக
7. தருகின்ற சக்தியும் பெருகி இனிதே
தவராஜன் வழி உலகோர் ஞான ஆட்சி படைப்பர்
முருகப்பெருமான் என் தலைமை ஏற்று
முழுமைஞானம் பயிலும் மக்களெல்லாம்

8. கர்ம வினை வென்று
கலியில் சித்திகள் பெறுவரப்பா
அப்பனே அரங்கனால் அனைத்தும்
ஆற்றலாக கலியில் நடந்தேறும்
9. வரமென அரங்கனைத் தொடர்ந்தால் போதும்
வாரி வழங்கி அரங்கன் தர்மத்தை
பாருலகில் அனைவரும் காத்தால் போதும்
பாடிடுவேன் தடையின்றி இந்த மாற்றம் உறுதியாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—